எங்கள் தமிழீழ மண்ணில் கால் வைக்கும் பொன் நாள் எந்நாளோ
எங்கள் தலைவன் ஈட்டிய வெற்றியில் இன்பம் காண்பது எந்நாளோ

அந்நாளே எங்கள் திருநாள் அதுவரை இல்லைப் பெருநாள் 2

அடைக்கலம் புகுந்திட்ட அடுத்தவர் நாட்டினில் எத்தனை கிடைத்தாலும்
அன்னைத் தமிழீழ மண்ணில் பாய்விரித்து அள்ளிச் சோறு தின்னும் சுகம் வருமா 2

அந்நாளே எங்கள் திருநாள் அதுவரை இல்லைப் பெருநாள் 2

ஆப்பிளும் ஆரேஞ்சும் அறுசுவைப் பழங்களும் அள்ளிக் கொடுத்தாலும்
அன்னைத் தமிழீழ மண்ணில் விளைந்திட்ட தென்னை இளநீர்க்கீடாகுமா 2
அன்னைத் தமிழீழ மண்ணில் விளைந்திட்ட தென்னை இளநீர்க்கீடாகுமா

அந்நாளே எங்கள் திருநாள் அதுவரை இல்லைப் பெருநாள் 2

கோடையை ஓட்டி குளிச்சியை ஊட்டி வேர்வையைத் தடுத்தாலும்
ஓடையில் குளித்து மேடையில் உறங்கும் உன்னதம் இங்கே கிடைத்திடுமா 2
ஓடையில் குளித்து மேடையில் உறங்கும் உன்னதம் இங்கே கிடைத்திடுமா

அந்நாளே எங்கள் திருநாள் அதுவரை இல்லைப் பெருநாள் 2

காரும் வீடும் காசும் பணமும் வாரிக் கொடுத்தாலும்
பேரும் புகழும் பிறந்த மண்ணைப் போல் தேடிக் கொடுத்திடுமா 2
பேரும் புகழும் பிறந்த மண்ணைப் போல் தேடிக் கொடுத்திடுமா

அந்நாளே எங்கள் திருநாள் அதுவரை இல்லைப் பெருநாள் 2

பசித்திடும் நேரத்தில் புசித்திட சுவையுள்ள பண்டங்கள் கிடைத்தாலும்
பனமரச்சாறும் பாலில்லா தேனும் குடித்திடும் சுகம் வரும் 2
பனமரச்சாறும் பாலில்லா தேனும் குடித்திடும் சுகம் வரும்

அந்நாளே எங்கள் திருநாள் அதுவரை இல்லைப் பெருநாள் 2

பட்டமும் பதக்கமும் படிப்புக்கு வேலையும் எத்தனை கிடைத்தாலும்
மாவீரன் எங்கள் பிரபாகரனின் கையால் பெறுவது போல்வருமா 2
மாவீரன் எங்கள் பிரபாகரனின் கையால் பெறுவது போல்வருமா

அந்நாளே எங்கள் திருநாள் அதுவரை இல்லைப் பெருநாள் 2

எங்கள் தமிழீழ மண்ணில் கால் வைக்கும் பொன் நாள் எந்நாளோ
எங்கள் தலைவன் ஈட்டிய வெற்றியில் இன்பம் காண்பது எந்நாளே